# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 28 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை ஒக்ரோபர் 27, 2020


## மணிவண்ணனன் மனு மீது நாளை கட்டளை



யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விண்ணப்பம் மீதான கட்டளை நாளை வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் தவணையிட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து

03

## கஜேந்திரன்கள் மந்திராலோசனை



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்களை அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் மற்றும் செயலாளரும்

03

## திருமலையில் கொரோனா தொற்று 9 ஆக உயர்வு

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புபட்டு திருகோணமலையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

திருகோணமலை மூதூர் நெய்தல் நகர் பகுதியில் 2 பேருக்கும் இக்பால் நகர் பகுதியில் ஒருவருக்கும் இன்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக

03

## 19 பொலிஸ் அதிகாரிகள் 9 சுகாதார அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று

இலங்கையில் சுமார் 19 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனிடையே பேலியகொட மின் சந்தையில் PCR பரிசோதனை நடாத்திய கொழும்பு மாநகரசபை பொது சுகாதார பிரிவு அதிகாரிகள் 9 பேருக்கு கொரோனா தொற்று

03

## அச்சுவேலியில் விபத்து ஒருவர் பலி



யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் இன்று பிற்பகல் இடம்பெற்ற வீதிவிபத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நவக்கிரிப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த சொகுசு கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தின் போது காரில் பயணித்த நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக்கூடாது



சீனா எச்சரிக்கை!

கொவிட் நெருக்கடி காலத்தில் அமெரிக்க இராஜாங்க செயலாளரின் இலங்கை விஜயம் தேவையற்ற ஒரு விடயம் என சாடியிருக்கும்

03




## இலங்கையை வந்தடைந்தார் அமெரிக்க இராஜாங்கச் செயலர்



இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க ராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இன்று பிற்பகல் இலங்கை வந்தடைந்தார்.

ஆசியாவின் நான்கு நாடுகளுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை ஆரம்பித்த அமெரிக்க ராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ மற்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் மார்க் டீ எஸ்பர் ஆகியோர் நேற்று (27) இந்தியா வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நடைமுறைகளை மீறுவோருக்கு சட்டநடவடிக்கை

### முதல்வர் ஆர்னோல்ட் அதிரடி

குருநகர் பாசையூர் பகுதி மற்றும் மீன் சந்தைகளில் நாளையிலிருந்து சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் காலம் ஒருவர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப் படுவார்கள் என யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் அதிரடி

03



## குருநகர் பாசையூர் ஊட்செல்லத் தடை

குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளுக்கு வெளியாள்கள் செல்வதற்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் குருநகர் பகுதியில் இருவர் கோரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் மக்கள் நெருக்கம் அதிகமுள்ள குருநகர் பகுதியில் ஏனையவர்களுக்கு தொற்று பரவுவதை தடுப்பதற்காக அப்பகுதியினை சாராதவர்கள்

03

## இன்று மூவர் பலி

### கொரோனா மரணம் 19 ஆக அதிகரிப்பு



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது,

தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்ற 19 மற்றும் 75 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வாழைத்தோட்டம் மற்றும் கொழும்பு 2 பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

முன்னதாக, ஐடிஎச் இல் சிகிச்சை பெற்றுவந்த 42 வயதான நபர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இதனை, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதுடன், அவர் ஜா-எல பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஒரு வாரத்துக்குள், கொரோனா வைரஸால் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 6ஆக அதிகரித்துள்ளது.

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# இரட்டை குடியுரிமை தொடர்பான பிரிவை நீக்க ஜனாதிபதி மறுப்பு



இரட்டை குடியுரிமை பெற்ற ஒருவர் அரசியலில் ஈடுபட அனுமதிக்கும் அரசியலமைப்பு விதிகளை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆத்திரமூட்டியதாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரட்டை குடியுரிமை பெற்றவர்களில் நாட்டை நேசிக்கும் மற்றும் நாட்டுக்காக சேவை செய்ய விரும்பும் உள்ளனர் என்று ஜனாதிபதி கூறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

20வது திருத்தத்தில் இரட்டை குடியுரிமை தொடர்பான விதிகள் சமீபத்தில் நாடாளுமன்ற வாக்கெடுப்பைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையை கைவிட்டபோது அவர் சந்தித்த அசௌகரியங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக் காட்டியதாகவும் வீரசுமன வீரசிங்க குறிப்பிட்டார்.

## 35,000 இற்கு மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தலில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில், இதுவரை சுமார்35,000 இற்கு மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) வழங்கிய நேர்காணலிலேயே இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி முதல் இன்று வரையில் சுமார் 185,000பேர் வரையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்படும் பொதுமக்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஹற்றனில் மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று!

ஹற்றனில் மேலும் 10பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஹற்றன்-டிக்கோயா நகரசபை தலைவர் சடையன் பாலச்சந்திரன் மேலும் கூறியுள்ளதாவது, "ஹற்றன் மீன் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து அவரோடு தொடர்புடைய 23பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதில் 10பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதில், குறித்த நபரின் குடும்பத்தினர் நால்வர் உட்பட மேலும் ஆறு பேருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஹற்றன் நகரை முழுமையாக மூடி, கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹட்டன் முடக்கப்பட்டது!

ஹட்டன் நகரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக மாற்றப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதன்படி, மீள் அறிவித்தல் வரும் வரையில் இது நடைமுறையில் இருக்கும் என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் பல கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கொரோனா தொற்றுநோய் பரவலை தடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் 64 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு மறுஅறிவிப்பு வரும் வரை தொடரும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

### நாட்டில் நேற்று மாத்திரம்

## 541 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

நாட்டில் நேற்று மாத்திரம் 541 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொரோனா கொத்தணிகளில் 499 பேரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் 42 பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, மினுவாங்கொடை - பேலியகொடை கொரோனா கொத்தணியில் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 939 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 413 ஆக பதிவாகியுள்ளது.

கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 4 ஆயிரத்து 464 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, தொற்றுடன் அடையாளம் காணப்பட்டோரில் மேலும் 130 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனையடுத்து, நாட்டில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 933 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தில் நாடளாவிய ரீதியில் 527 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் இந்த தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நாட்டில் இதுவரையில் 4 இலட்சத்து 50 ஆயிரத்து 836 பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அதிக கொரோனா பாதிப்புகளை எதிர்கொண்ட சர்வதேச நாடுகளின் பட்டியலில் இலங்கை 116ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீன்களை களஞ்சியப்படுத்தல் - பதனிடுதல் தொடர்பாக ஆராய்வு

கொரோனா காரணமாக கடற்றொழில் செயற்பாடுகள் சீரற்ற நிலையில் காணப்படுவதனால் கரைக்கு கொண்டு வரப்படுகின்ற மீன்களை களஞ்சிப்படுத்தல், கருவாடு பதனிடுதல் மற்றும் ரின்மீன் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு சம்மந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீன் ஏற்றுமதியாளர்கள், கருவாடு உற்பத்தியாளர்கள், ரின் மீன் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கும் அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக பேலியகொட மீன் சந்தை உட்பட பல்வேறு மீன் சந்தைகள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் ஏற்றுமதியும் தடைப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, பலநாள் கலங்களில் மூலம் பிடித்து வருப்பட்ட ஆயிரக் கணக்கான தொன் மீன்கள் டிக்கோவிற்ற உட்பட நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் தேங்கிக் கிடப்பதனால் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட அவசர கலந்துரையாடலில், கருத்து தெரிவித்த கருவாடு மற்றும் ரின்மீன் உற்பத்தியாளர்கள், மீன்பிடித் துறைமுகங்களில் தேங்கிக் கிடக்கின்ற மீன்களை கொள்வனவு செய்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தாங்கள் தயாராக இருக்கின்ற போதிலும், கருவாடு மற்றும் ரின்மீன் போன்றவற்றிற்கான இறக்குமதி வரி தளர்த்தப்பட்டுள்ளதனால் தமது உள்ளூர் உற்பத்திகளுக்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லாமல் இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த கடற்றொழில் அமைச்சர் - இராஜாங்க அமைச்சர் ஆகியோர் குறித்த பொருட்களுக்கான இறக்குமதி வரி தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடுவதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் கலந்துரையாடி சதோச வர்த்தக நிலையங்களில் உள்ளூர் உற்பத்திகளுக்கான முன்னுரிமை அளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் உறுதியளித்துடன் தேங்கிக் கிடக்கின்ற மீன்கள் பழுதடைவதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர்.

அதேவேளை, அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடற்றொழில் திணைக்களத்திற்கு கிடைத்த 200 மில்லின் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி, மேலதிகமாக உள்ள மீன்களை கொள்வனவு செய்து களஞ்சிப்படுத்தி மக்களுக்கு விநியோகிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த மீன்களை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்வதற்கான விலைகளும் இன்றைய கலந்துரையாடலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பின் கீழ் நியமனக் கடிதங்கள் கையளிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் 'சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக வறுமையில்லாத இலங்கையை உருவாக்குதல்' எனும் பிரதான குறிக்கோளின் அடிப்படையில், ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாரை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நற்பிட்டிமுனை மக்கள் இணைப்பு காரியாலயத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மிகக்குறைந்த கல்வித் தகைமையுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அரச தொழிலினை பெற்றுக் கொடுத்து அக்குடும்பங்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் நோக்குடன் ஜனாதிபதியின் சிந்தனைக்கமைவாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல்.முஹம்மட் றபீக் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கா விடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந்நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நியமனம் வழங்கும் நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல்.முஹம்மட் றபீக் ஓய்வு பெற்ற உதவி அதிபர் எம்.எச்.ஜலாலுதீன் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

# மூன்றாவது அலை இரு வாரங்களில் 5 ஆயிரம் பேருக்கு தொற்று ஆறு பேர் பலி

ஆறு பேரின் உயிரைப் பறித்து ஐயாயிரம் பேரை பீடித்து கொடூரமாகத் தொடரும் கொரோனா 3வது அலையில் சிக்கி இலங்கை திணறிவருகிறது.

திவுலப்பிட்டிய பகுதியில் தொற்று உறுதியான பெண்ணில் இருந்து ஆரம்பித்த கொரோனா 3வது அலைக்கு நேற்றையதினம் வரை 4 ஆயிரத்து 939 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொட கொத்தணியாக ஆரம்பித்து தற்போது பேலிகொட கொத்தணியாக விரிவாக்கம் பெற்று இலங்கையின் பல மாவட்டங்களிலும் தொற்று பரவலை ஏற்படுத்தியுள்ள 3வது அலையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் ஆறு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

அதிலும் இன்று தொடர்ச்சியாக மூவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் 541 பேருக்கு தொற்ற உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 413 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு கொரோனா தொற்று உறுதியானவர்களில் இன்று 110 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளதை அடுத்து இதுவரை குணமடைந்தவர்களது மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 43 ஆக உயர்வடைந்துள்ளது.

இதையடுத்து கொரோனா தொற்று உறுதியான நிலையில் இலங்கையில் உள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருபவர்களது மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 351 ஆக உள்ளதுடன் இதுவரை சிகிச்சை பலனின்றி 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று 293 பேருக்கு கொரோனா தொற்று

நாட்டில் மேலும் 293 பேர் கோரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை இன்று செவ்வாய்க்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 2 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் என்றும் 291 பேர் மினுவாங்கொட - பேலியகொட கொரோனா தொற்று பரவல் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் இன்று வரை 8 ஆயிரத்து 706 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## திருமலையில்...

திருகோணமலை சுகாதார பிரிவு தரப்பில் இருந்து அருவி இணையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புபட்டு முன்னதாக திருகோணமலையில் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைவாக புல்மோட்டையைச் சேர்ந்த ஒருவருக்கே முதன் முதலில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. மேலும் திருகோணமலை சுமேதகம பகுதியில் ஒருவருக்கும், அபயபுர பகுதியில் ஒருவருக்கும், 5ம் கட்டை பகுதியில் ஒருவருக்கும், தம்பலகாமம் பகுதியில் ஒருவருக்கும், கொழும்பு என்.டி.பி. வங்கி பணியாளர் ஒருவருக்கும் என ஆறு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து அவசியத் தேவைகள் இன்றி மூதூர் பகுதிக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வெளியிடங்களைச் சேர்ந்த மக்களுக்கு பொலிசாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## குருநகர்...

வெளி நபர்கள் உட்செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

## 19 பொலிஸ்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நகரசபை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இந்நிலையில், கொழும்பில் ஒக்டோபர் 18 முதல் நேற்று வரை மொத்தம் 5,368 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 937 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று திங்கட்கிழமை மாத்திரம் 541 கொரோனா நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில், கம்பாஹா மாவட்டத்தில் இருந்து 304 பேரும், கொழும்பிலிருந்து 191 பேரும், தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து இருந்து 42 நோயாளிகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார...

அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்

குருநகர் பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இனிவரும் நாட்களில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியம் அதிலும் குறிப்பாக குருநகர், பாசையூர் பகுதி மற்றும் மீன் சந்தை பகுதியில் சுகாதார நடைமுறை பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரால் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்படும் அங்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுவது அவசியம்.

குருநகர் மற்றும் பாசையூர் மீன் சந்தைக்கு அப்பகுதியைச் சேர்ந்தவர்களோ அல்லது அல்லது வெளியிடங்களிலிருந்தோ வருவோர் கடும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் குறித்த நடைமுறை நாளை காலையிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது

எனவே பொதுமக்கள் குறித்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும்குறித்த நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

குருநகர் பாசையூர் சந்தைக்கு வருவோர் கட்டாயமாக தமது பதிவினை மேற்கொண்ட பின்னரே அப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

## மணிவண்ணன்...

நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்ின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்..

இந்த மனு இன்று செவ்வாய்க்கிழமை .யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து நாளை புதன்கிழமை இடைக்காலக் கட்டளை வழங்கப்படும் என்று நீதிபதி தவணையிட்டார்.

## கஜேந்திரன்கள்...

பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தனது தவிசாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார்.

இதனால் பெரும் குழப்பங்கள் ஏற்பாட்டிருக்கின்ற நிலையில் முன்னணியின் உறுப்பினர்களை அக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

## இலங்கையின் உள் விவகாரங்களில்...

சீன அரசாங்கம் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தேவையற்றுத் தலையிடக் கூடாது என்றும் எச்சரித்துள்ளது.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இன்று (27) இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தநிலையில் அவரின் இலங்கை விஜயம் குறித்து இலங்கைக்கான சீன தூதரகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையிலேயே இவ்வாறு சீனா குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

அமெரிக்க ராஜாங்க செயலாளர் தனது இலங்கை விஜயத்தின் போது, உள்நாட்டு எதிர்பார்ப்புகளுக்கு தன்னிச்சையான வகையில் தலையிடக் கூடாது என்று சீன தூதரகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை கொவிட் 19 தொற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தருணத்திலேயே அமெரிக்க ராஜாங்க செயலாளர் தனது அரசு முறை விஜயத்தை மேற்கொள்கிறார்.

அமெரிக்காவில் தற்போதைய நிலையில் சுமார் 8.8 மில்லியன் பேர் கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 2 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில், மைக் பொம்பியோவின் விஜயத்துக்கு முன்னதாக பெருமளவான அரச பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்புவது சுகாதார நடைமுறைகளை மீறும் செயல் என்று சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, பொம்பியோவின் இலங்கை விஜயத்தின் போது வீதி கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்யுமாறு கோருவது இந்த நாட்டின் கௌரவத்தை பாதிக்கும் செயலாக அமையாதா என்று சீனா கேள்வி எழுப்பியுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையானது வெளிநாட்டு உறவுகளை தேவையறிந்து தெரிவு செய்ய வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் பிரதி ராஜாங்க செயலாளர் டீன் தொம்சன் விடுத்துள்ள அறிவித்தல், சீன - இலங்கை ராஜதந்திர உறவை பாதிக்கும் செயல் என சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

இதனூடாக மற்ற நாடுகளின் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளின் தன்னிச்சையான தலையீட்டிலும், சிறிய மற்றும் நடுத்தர நாடுகளை தங்களுக்கான உறவுகளை நாடுகளை தேர்ந்தெடுப்பதில் கட்டாயப்படுத்துவதிலும் உள்ள அமெரிக்க தலையீட்டை மேலும் அம்பலப்படுத்துகின்றது என்று சீனா சுட்டிக்காட்டியுள்ளது.



# ஒரு முகக்கவசத்தை 4 மணித்தியாலத்துக்கு மாத்திரமே அணிய முடியும்

ஒரு முகக்கவசத்தை ஆகக் கூடியது 4 மணித்தியாலத்துக்கு மாத்திரமே அணிந்திருக்க வேண்டும். அதன்பின்னர் புதிய முகக்கவசத்தை அணிவது அவசியமென சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் சமூக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் சமூக சுகாதார பிரிவின் விசேட வைத்தியர் உத்பலா அமரசிங்க மேலும் கூறியுள்ளதாவது, "தொழில் நிமித்தம் வெளியில் செல்வோர் அல்லது வேறு தேவைகளுக்காக வெளியே செல்வோர் ஒரு முகக்கவசத்தை 4 மணித்தியாலமே பயன்படுத்த வேண்டும்.

எனவே, வெளியே செல்லும் போது, மேலதிகமாக 2 முகக்கவசங்களை கொண்டுச் செல்லுவது சிறந்தது.

அதன்பின்னர், புதிய முகக்கவசத்தையே கட்டாயம் அணிய வேண்டும். மேலும் முகக்கவசங்களை ஆங்காங்கே வீசுவதனாலும் கொரோனா தொற்று பரவுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

முகக்கவசங்களை அணியும் போது மூக்கு, வாய் என்பவற்றை நன்றாக மூடும் வகையில் அணிய வேண்டும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை!



தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்படும் பொதுமக்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளமையால் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகள் மீறி பெரும்பாலானோர் செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே அஜித் ரோஹண இவ்வாறு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கடந்த தினங்களில் பொதுப்போக்குவரத்தில் உரிய முறைமையில் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவில்லை.

மேலும் பொது இடங்களிலும், வரிசைகளிலும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை பொதுமக்கள் பின்பற்றாத நிலைமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் தொடர்ந்தும் இவ்வாறாக செயற்படுவார்களாயின் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# யாழில் கொரோனோ தொற்றுக்கு உள்ளான இருவரும் தனிமைப்படுத்தப் பட்டிருந்தனர்!

யாழ்ப்பாணம் குருநகர் கடலுணவு நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு பேரும் பாசையூர் மேற்கு பகுதியில் உள்ள அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான வளாகத்தில் கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் குருநகரில் தங்கவைக் கப்பட்டிருக்கவில்லை என்று அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் குருநகரையும் மற்றையவர் பருத்தித்துறையையும் வதிவிடமாக உள்ள போதும் பேலியகொடவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியதும் கடலுணவு நிறுவனத்துக்குச் சொந்தமான பாசையூர் மேற்கில் உள்ள இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர். அதனால் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தைக்கு மீன் கூலர் வாகனத்தில் சென்று வந்த இருவர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு கோரோனா தொற்று உள்ளமை நெற்று திங்கட்கிழமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

அவர்கள் இருவரும் கடந்த புதன்கிழமை தனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரண்டு பேரும் கோவிட் -19 சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றப்படுவதுடன், அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் அதிகாரிகள் கூறினர்.

# நாட்டை முடக்க மாட்டோம்!



கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்ததுடன், ஜனாதிபதி இது குறித்து அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வழமையான பொருளாதார நடவடிக்கைகள் தொடருவதற்கு அனுமதிப்பது எனவும் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த முறையை விட இம்முறை கொரோனா வைரஸ் பரவல் வேகமாக பரவுகின்றது எனவும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் அனைவரும் சுகாதார அதிகாரிகளினால் முன்மொழியப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாழ்வதே சிறந்த தீர்வு எனவும் அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது.

# கொழும்பில் கொரோனா ஆபத்து அதிகம்

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியும் நுகேகொடையும் கொரோனா ஆபத்து அதிகம் உள்ள பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையின் தொற்றுநோயியல் பிரிவு, அதிகம் ஆபத்தான பகுதிகளின் விபரங்களை தற்போது வெளியிட்டுள்ளது. அதிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தொற்றுநோயியல் பிரிவு இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியுள்ளதாவது, "27 பொது சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகள் ஆபத்தானவையாக காணப்படுகின்றன.

இதில் கொழும்பில் ஏழு சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகளும், கம்பஹாவில் 19 சுகாதாரபரிசோதகர் பிரிவுகளும், களுத்துறையில் இரண்டு சுகாதார பரிசோதகர் பிரிவுகளும் ஆபத்தானவையாகும்.

அதாவது, கொழும்புமாநாகர சுகாதார பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளும், நுகேகொடை, மொரட்டுவ, பத்தரமுல்ல, கொலனாவ உட்பட பலபகுதிகள் மிகவும் ஆபத்தானவையாக காணப்படுகின்றன" என குறிப்பிட்டுள்ளது.

# மரண வீட்டுக்கு சென்றவருக்கு கொரோனா

பதுளை- ஸ்பிரிங்வெளி, மேமலை பகுதியில் மரண வீடொன்றுக்குச் சென்றுவந்த, ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மரண வீட்டில் கலந்துகொண்டவர்களை தனிமைப் படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஸ்பிரிங்வெளி, மேமலை தோட்டத்தைச் சேர்ந்த 69வயது பெண்ணொருவர், உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார்.

அவரது இறுதி கிரியையில் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கலந்துகொண்டுள்ளார்.

இவர் பேலியகொட மீன் சந்தையில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர், பதுளைக்குச் சென்று வந்தமை தெரியவந்ததையடுத்து ஹட்டன் பொலிஸார் உடனடியாக இவ்விடயத்தை பதுளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பதுளை பொலிஸார், ஸ்பிரிங்வெளி பகுதிக்கு சென்று மரணவீட்டுக்கு வந்த அனைவரையும் தனிமைப்படுத்தியுள்ளதுடன் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.